OS.No. : 04/2022 C/w 45/2023& 46/2023

நாள் :13.02.2025

பி.வா.சா. :1

பெயர் : பானுமதி

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கும் என் கணவருக்கும் திருமணம் நடந்தபோது என்ன சொத்து என் கணவருக்கு இருந்தது என்றால் ஒரு மளிகை கடை, ஒரு வீடு, 2 கறவை மாடு, 2 காளை மாடு, 2 கன்றுக்குட்டிகள் ஆகியவை இருந்தது. மேற்படி சொத்தை தவிர வேறு எந்த சொத்தும் இல்லையா என்றால் 10 மா நிலம் இருந்தது. அந்த 10மா நிலம் மயிலாடுதுறை, சித்தர்காடு என்ற இடத்தில் இருந்தது. என் கணவர் எந்த வருடம் வெளிநாடு போனார் என்றால் 1980ல் அபுதாபி போனார். 1998 வரை அங்கிருந்தார். என் கணவர் வெளிநாட்டில் இருந்தபோது எந்தெந்த இடங்களில் சொத்து வாங்கினார் என்றால் கீரனுரில் நிலம் வாங்கினார். மஞ்சவாய்க்காலில் ஒரு 10 மா நிலம் வாங்கினார். என் கணவர் மட்டும் என்னென்ன சொத்துக்கள் வாங்கினார் என்றால் என் பெரிய மகனும் கணவரும் சேர்ந்து தான் அந்த சொத்துக்களை வாங்கினார்கள். ஆசீர்வாத் கல்யாண மண்டபமும் வாங்கினார்கள் அந்த மண்டபம் என் பெயரில் தான் இருக்கிறது. எனக்கு மூன்று மகன்கள், ஒரு மகள். என் பெரிய மகன் ரகுராமன் பராமரிப்பில்தான் இருக்கிறேனா என்றால் ஆமாம். என் கணவர் 04.06.2024 அன்று இறந்தார். நான் 7ம் வகுப்பு படித்திருக்கிறேன். என் கணவர் இறப்பு வரை என்னையும் என் கணவரையும் என் மகன் ரகுராமன் தான் பார்த்துக்கொண்டார். என் கணவர் ஒரு வருடம் படுத்த படுக்கையாக இருந்தார். இந்த வழக்கை என் மகன் சீத்தாரமன் தாக்கல் செய்துள்ளார். என்ன வழக்கு போட்டுள்ளார் என்றால் மண்டப பிரச்சனைக்காக இந்த வழக்கு போட்டுள்ளார். என் மகன் சீத்தாராமன் மீது வழக்கு எதுவும்

ஒ. பானுமதி

தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை அவர் தான் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். என் மூத்த மகன் ரகுராமன் எந்த வருடம் வெளிநாட்டிற்கு போனார் என்றால் 30 வருடம் வெளிநாட்டில் இருந்தார். எந்த வருடம் போனார் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. சீத்தாராமன் எந்த வருடம் வெளிநாடு போனார் என்று சொல்லமுடியுமா என்றால் தெரியவில்லை. அவர் எத்தனை வருடம் வெளிநாட்டில் இருந்தார் என்றால் ஒரு வருடம் தான் இருந்தார். நான் முதல் விசாரணை அபிடவிட்டில் என் இளையமகன் சீத்தாராமனை பற்றி சொல்லியுள்ள சங்கதிகளான வெளிநாட்டில் சீத்தாராமன் சரியாக வேலைக்கு போகமாட்டான். போதை பொருள் உட்கொண்டான். முதலாளியை ஏமாற்றினான். சிறையில் அடைக்கப்பட்டான் என்ற சங்கதிகள் எனக்கு எப்படி தெரியும் என்றால் என் பெரிய மகன் ரகுராமன் சொல்லி தெரியும். அவருக்கு நிரந்தர தொழிலாளர் விசா தடை உள்ளது என்ற சங்கதி எனக்கு என் பெரிய மகன் ரகுராமன் சொல்லிதான் தெரியும். 1980 முதல் பதினெட்டு வருடங்கள் வெளிநாட்டில் வேலை பார்த்து சம்பாதித்த பணத்தில் எதாவது கட்டிடம் கட்டினாரா என்றால் ஆசீர்வாத் கல்யாண மண்டபம் அவர் தான் கட்டினார். சீத்தாராமனை மேனேஜராக அந்த கல்யாண மண்டபத்தில் என் கணவர் தான் நியமித்தார். எந்த வருடம் என்றால் 2007ல் கட்டி முடித்தோம். அதன்பிறகு சீத்தாராமனை மேனேஜராக அந்த கல்யாண மண்டபத்தில் என் கணவர் தான் நியமித்தார். 2005 ம் ஆண்டு கல்யாண மண்டபம் கட்டப்பட்டுள்ள இடத்தை வாதி சீத்தாராமன் வாங்கி 2007ல் கல்யாண மண்டபம் கட்டி முடித்தார் என்றால் சரியல்ல. அதனால் தான் 2007 ல் கட்டப்பட்ட கல்யாண மண்டபத்தை 1998 லேயே என் கணவர் கட்டியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன்

சு. சே-பானுமதி

என்றால் சரியல்ல. 2007 ல் தான் கல்யாண மண்டபம் கட்டினோம். என் கணவர் சீத்தாராமனுக்கு உயில் எதுவும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என் கணவரிடம் லோன் வாங்குவதற்காக சீத்தாராமன் ஒரு உயில் பத்திரம் எழுதி பெற்றுள்ளார் என்று சொல்லியுள்ளது பொய் தானே என்றால் இல்லை. எந்த வருடம் லோன் வாங்குவதற்கான சீத்தாராமன் அந்த உயில் பத்திரத்தை எழுதி வாங்கினார் என்றால் 2017 ல் வாங்கினார். உயில் பத்திரத்தை வைத்து கொண்டு கடன் யாரும் தருவார்களா என்றால் கொடுத்திருக்கிறார்கள். என் கணவர் கூறை நாட்டில் ஒரு புறம்போக்கு நிலத்தில் சைக்கிள் ஸ்டாண்ட் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. 1980 ல் என் கணவர் வெளிநாட்டிற்கு கூலி தொழிலாளியாகத்தான் வேலைக்கு சென்றார் என்றால் சரியல்ல. மேனேஜர் வேலைக்குதான் சென்றார். என் கணவர் 12 ம் வகுப்பு படித்திருக்கிறார். அபுதாபியில் எந்த கம்பெனியில் வேலை பார்த்தார் என்றால் ஆல்பர்ட் அபுடார் என்ற கம்பெனியில் வேலை பார்த்தார். என் கணவர் வெளிநாடு போன சமயத்தில் வீட்டில் இருந்த மாடுகளை வைத்துக்கொண்டு நான் தான் என் குழந்தைகளை கஷ்டப்பட்டு வளர்த்தேன் என்றால் சரி. என் அம்மாவும் என் கொழுந்தனாரும் உதவிக்கு இருந்தார்கள். மாடுகள் வைத்து பால் கறந்து வந்த வருமானத்தில் குழந்தைகளை வளர்த்தேன் என்றால் சரி. சீத்தாராமன் எத்தனை வயதில் வெளிநாடு போனார் என்றால் 20 வயதில் போனார். அவருக்கு 2009 ல் திருமணம் செய்து வைத்தேன். அந்த திருமணம் பெரியோர்கள் பார்த்து செய்து வைத்த திருமணம் என்றால் சரி. அப்படி இருக்கும்போது அவர் தன் இஷ்டத்திற்கு திருமணம் செய்து கொண்டதாக எதிருரையில் சொல்லியிருப்பது தவறு என்றால் ஆமாம். சீத்தாராமன்

G-பானுமதி

வங்கி கணக்கின் மூலம் வெளிநாட்டிலிருந்து என் கணவருக்கு பணம் அனுப்பினார் என்றால் இல்லை. சீத்தாராமன் வெளிநாட்டில்இருந்து அனுப்பிய பணத்தை வைத்துதான் என் கணவர் மயிலாடுதுறையில் நிறைய இடங்கள் வாங்கிபோட்டார் என்றால் சரியல்ல. என் பெயரில் என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்றால் ஆசீர்வாத் கல்யாண மண்டபம் மட்டும் உள்ளது. அந்த மண்டபத்தை நாங்கள் விலை கொடுத்து வாங்கினோமா என்றால் என் கணவர் வாங்கினார். அவர் வாங்கி கட்டிடம் கட்டி என் பெயரில் மாற்றினார். எந்த வருடம் என் பெயரில் கல்யாண மண்டபத்தை மாற்றினார் என்றால் தெரியவில்லை. என் மகள் பிரேமாவிற்கு தான் தெரியும். என் மகள் பிரேமா இந்த வழக்கில் தரப்பினர் என்றால் சரி. எங்களுக்கும் சீத்தராமனுக்கும் எப்போது பிரச்சனை வந்தது என்றால் 2016 ல் பிரச்சனை வந்தது. பிரச்சனை வந்தபிறகு பிரச்சனையை தீர்ப்பதற்கு குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் கூடி பேசினோமா என்றால் இல்லை. இராமநாதன், முருகையன், கோதண்டபாணி ஆகியோர் என் கணவரின் அண்ணன்கள். இராமநாதன், முருகையன் இறந்துவிட்டார்கள். கோதண்டபாணி உயிருடன் மயிலாடுதுறை ஜோதி நகரில் இருக்கிறார். அவருக்கும் எனக்கும் சுமூகமான உறவு முறை உள்ளது என்றால் சரி. சீத்தாராமனுடன் கோதண்டபாணி சுமூகமான உறவு முறையில் உள்ளரா என்றால் ஆமாம். 27.02.2016 அன்று இராமநாதன் வீட்டில் முருகையன், கோதண்டபாணி, இராமநாதன் ஆகியோர் பிரச்சனை பற்றி பேசி சுமூகமான முடிவுக்கு வந்தோம் என்றால் இல்லை. அதுபோல் ஒரு உடன்பாடு நடந்தது என்றாலும் அதில் நானும் கையெழுத்து போட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. பேசினோம் ஒத்துக்கொள்ளவில்லை. சீத்தாராமனை தவிர யாரும் ஒத்துக்கொள்ளவில்லை என்றால் சரி. சீத்தாராமன் தான்

G. பா தமதி

உடன்பாட்டிற்கு கேட்டது. அந்த உடன்பாட்டின் படி உடன்படிக்கை எழுதி நாங்கள் கையெழுத்து போட்டிருக்கிறோம் என்றால் சரியல்ல. நான் என் மகன் ரகுராமனுக்கு நான் எதாவது சொத்து எழுதி வைத்திருக்கிறேனா என்றால் ஆமாம். அரியலூர் மாவட்டம், T. பலூர் என்ற ஊரில் உள்ள சப் ரிஜிஸ்டர் ஆபிஸிற்கு போனேனா என்றால் ஆமாம். மயிலாடுதுறையில் உள்ள சொத்திற்கு அரியலூர் மாவட்டம், T. பலூர் என்ற ஊரில் உள்ள சப் ரிஜிஸ்டர் ஆபிஸில் சொத்தை பதிவு செய்ய சிறப்பு காரணம் எதுவும் உள்ளதா என்றால் இங்கு எழுதினால் சீத்தாராமன் சண்டைக்கு வருவான் அதனால் அங்கு போய் எழுதினேன். அந்த சொத்தை எப்போது வாங்கினோம் என்றால் பத்திரத்தை பார்த்தால் தான் தெரியும். T. பலூர் கிராமத்தில் ஒரு சொத்தை வாங்கி அன்றே அரை மணிநேரத்தில் அந்த சொத்தை என் மகன் ரகுராமன் பெயரில் எழுதி வைத்ததற்கு எதாவது சிறப்பு காரணம் உள்ளதா என்றால் இல்லை. 2016 ல் எங்கள் குடும்பத்தில் ஒரு குடும்ப ஏற்பாடு ஏற்பட்டது என்றாலும் வாதியை ஏமாற்றுவதற்காக பத்திரங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வாதி சீத்தாராமன் மீது எத்தனை போலீஸ் கம்ப்ளைன்ட் கொடுத்தேன் என்றால் நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. என் மகனும் மகளும் எத்தனை புகார் கொடுத்தார்கள் என்றால் எந்த புகாரும் கொடுக்கவில்லை. 21 பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் அதில் ஒரு வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. என் குடும்ப பெரியவர்கள் மற்றும் என் கணவரின் அண்ணன்களை அழைத்து விசாரித்தால் தான் இந்த உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் விசாரிக்கலாம். தாவா சொத்துக்கள் அனைத்தும் சீத்தாராமன் சம்பாதித்து வாங்கியது என்றால் சரியல்ல. பொய். அதனால்

ஏ. பானுமதி

தான் அவர் மீது போட்ட வழக்கையே இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 27.02.2016 அன்று ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டில் கையெழுத்து செய்து விட்டு வாதியை ஏமாற்றுவதற்காக பொய்யாக கட்சியாடுகிறோம் என்றால் சரியல்ல. வாதிக்கு எதிராக ஏற்படுத்திய ஆவணங்கள் ரத்தாக வேண்டுமென்றால் சரியல்ல. என் மூத்த மகன் ரகுராமன் பராமரிப்பில் நான் இருப்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ரு. பானுமதி

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்து சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

13/2/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

13.2.25